ஸ்ரீ

தருமதேவதா மலர் 1

வேள்பாரி.

காந்தி குமாரி ஆசிரியர்

மு. க. காந்தி தாசன், பர்மா.

முதற்பதிப்பு.

Price. 0-8-0 1932 பதிப்புரிமை பெற்றது.

நவீனகதா அச்சுக்கூடம், இரங்கூன்.

ஸ்ரீ:

காந்தி தாசன் எழுதிய நூல்கள்.

காந்தி குமாரி.
நளாயனி.
தமயந்தி.
பர்மிய குமாரி.
காந்திபிரயத்தனம்.
பாரி வேட்டை.
பிரகலாதன்.
பண்டைக் குருகுலம்.
பர்மா பிரிவினை.
துருவாசன்.
சுதந்தர கீதம்.
தேவ தேவி.
தொண்டரடிப்பொடி.
திருமூல நாயனார்.
ஆனாய நாயனார்.
வள்ளல் பாரி.
ஜெனமே ஜெயன்.
யது குமாரி.
மனுநீதிச் சோழன்.
கண்ணன் கீதம்.
கோவிந்த நாம சங்கீர்த்தனம்.
திருவரங்கச் சதகம்.

ஸ்ரீ:

முகவுரை.

செந்தமிழ் அறிந்த செல்வர்காள்!

தமிழகமானது பூர்வந்தொட்டு முடிவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியரென்னும் மூவேந்தர்களால் ஆளப்பட்டு வந்திருப்பதென்பதை நாம் சங்கநூல்கள் வாயிலாக அறிகின்றோம். என்றாலும் தமிழரசர்களுக்குள் ஐக்கியப்பட்ட சிற்றரசர்களும் பலர் இருந்து வந்திருப்பதும் சங்க நூல்களால் தெரியவருகிறது, அவர்களில் வேளிர் குலத்தாரே மிகுதியாக இருந்து வந்திருக்கின்றார்கள்.

அவற்றுள் பாண்டி மண்டலத்திலே மதுரைமாநகருக்கு வடகீழ்பால் சாற்பதுமைல் தூரத்திலுள்ள பறம்பு மலை (பிரான்மலை) யை இராஜதானியாக்கி "கிழக்கில் திருமெய்யம். தெற்கில் கானப்பேர், நாட்டரசன் கோட்டை, மேலூர். மேற்கில், திண்டுக்கல். வடக்கில் மணற்பாறை, விராலிமலையையும் எல்லையாகக் கொண்ட பறம்புநாட்டை தொன்று தொட்டு யாதவ அரசர்களும், இரண்டாவதாக பாண்டிய அரசர்களும் ஆண்டுவந்திருக்கின்றார்கள் என்பது சங்க நூல்களாலும் சிலாசாசனங்களாலும் தெரிய வருகின்றது.

பாரததேசம் ஆங்கிலேயர் வசப்பட்ட சிறிது காலத்திற்கு பின் மட்டாதிபதியின் ஆக்ஷியிற் சிக்கி பறம்புநாடு தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. இப்பொழுதிருக்கும் பறம்புநாடானது மேலே காட்டிய எல்லையளவிலில்லாமல் சுருங்கி யிருந்தும் இன்றும் பிரான்மலையை இராஜதானியாகக் கொண்டு ஆளப்பட்டு வருவதே தக்க சாக்ஷியாகின்றது. எஞ்சியபாகங்கள் எவர்காலத்தில் சிதறப்பட்டதென்பது புலப்படவில்லை.

முற்கூறிய எல்கைக்குட்பட்ட பறம்புநாடானது "வள்ளல்பாரி" என்ற யாதவ அரசனால் கபிலர் என்ற அந்தணப் பெரியாரை அருந்தோழனாகவும், அமைச்சனாகவும் பெற்று, "பாரிவேந்தன்" ஆட்சிபுரிந்து வருங்காலத்தில் பறம்புமலைச்சாரலில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் "பாரீசன்" (மங்கை நாயகன்) பாரி வேந்தர்க்குத் தோன்றாத் துணையாக நின்று அநுக்ரஹம் புரிந்திருப்பதானது ஒரு வேந்தனாகிய பாரி வேந்தர்க்கும், பெரு வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கட்கும் எதிர் பாராது நேர்ந்த மஹாயுத்தத்தில் முடிவேந்தர்களாகிய மூவேந்தரும் முறியடிக்கப்பட்டு அபஜெயமடைந்ததனாலும், பாரிவேந்தன் பாரீசன் அநுக்ரஹத்தால் வெற்றியடைந்திருப்பதனாலும் பாரிவேந்தர்க்குத் தெய்வசகாயம் இருந்ததென்பது தெற்றென விளங்குகின்றது.

பாடிவந்த பாவலர்க்கும், பாடாதிருந்த படர்கொடிக்கும், பால் நினைந்தூட்டும் தாயினும் தயையுடைய பாரி வேந்தன் சிறந்த தெய்வபக்தியும், தேசபக்தியும், ஜனபிமானியும், தமிழபிமானியும், மன்பதைகளின்மீது அபார கருணையு முடையவன். ஓரறிவுடைய முல்லைக்கொடியையும் தமதுயிரினுஞ் சிறந்ததாகக் கருதித் தனதழகிய புதுமையான பொற்றேரை நல்கி கால்நடையாக இராஜமாளிகை சென்றானென்றால், அவனது வள்ளற் றன்மையை நாம் வரையறுத்துக் கூறவியலுமா? பாரிமன்னன் காலத்திற்றான் பல உயர்ந்த கட்டடங்களும், பெரிய பெரிய தேவாலயங்களும், பலமான மதிற்சுவர்களும் கோட்டைகளும் அமைந்து பறம்புநாடு ஒப்புயர்வற்றதாகி சிறந்த தெய்வீக நாடாக விளங்கியது. இதுபற்றியே "உழவர்க்கு உழாதன நான்கு பயனுடைத்தே" என்றும் "காலமின்றி மரம்பயன்தரும்" என்றும் பொய்யாக்கபிலர் புறநானூற்றில் அழகொழுகப் போற்றி வருணிக்கின்றார். இன்னும் பதிற்றுப் பத்தில் "புலர்ந்தசாந்திற் புலராவீகை மலர்ந்த மார்பின் மாரிவண் பாரி" என மழைக்கு உவமையாக பாரியேயுளான் என பாரியைச் சிறப்பித்து கூறப்பட்டிருக்கின்றது.

பறம்புநாடு பாரிவேந்தர்க்குப் பிற்காலத்தில் பாண்டியன் வசமானபின் பலவித இன்னல்களடையப்பெற்றுச்சின்னாபின்னஞ் செய்யப்பட்டு விட்டது. பாரிவேந்தன் முதலாவது இராஜ ராஜ சோழன் காலத்தில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் இருந்ததாக யூகிக்க வேண்டியிருக்கின்றது. சற்றேறக்குறைய கி. பி. 900ம் வருடத்திற்கும் 1000ம் வருடத்திற்கும் இடையில் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது.

பாரிமன்னன் சரித்திரம் மிகச்சிறப்புப் பெற்றது. இது போன்ற சிருங்காரம், வீரம், சோகம் நிரைந்த சரித்திரம் நம் பாரதநாட்டில் (இந்தியாவில்) ஒன் றிரண்டுக்கு மேல் இல்லை எனலாம்.

“ அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்புமுரிய பிறர்க்கு
அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு ”

என்னும் தெய்வப் புலமை திருவள்ளுவனார் வாக்கிற்கு செங்கோல் வேந்தனாகிய பாரியே சிறந்த சான்றாகின்றான். “ ததீசி முனிவர் ” க்குப்பின் தமிழ் நாட்டு பாரியே தன துயிரைத் திரணமாக மதித்து தானஞ்செய்து தமிழுலகின் மானத்தைக் காப்பாற்றினான். இவன் ஒழுக்கமும், தூய்மையும், பெருமையும் பொருந்தியவன் இன்னுமிவன் நீதி, நிதானம், பொறுமை, பேறிவு தர்மம் முதலிய குணங்களுக்கு அருங்கலமானவன். உத்தம க்ஷத்திரிய தருமத்தை உண்மையிற் கைக்கொண்டவன். இந்நூல் மிக்கச் சிறியதேயாயினும், “ கடுகைத் துளைத்தேழ் கடலைப்புகட்டி ” என்னும் இடைக்காடர் வாக்கிற்கும், “ அணுவைத் துளைத்தேழ் கடலைப்புகட்டி ” என்ற ஔவை பிராட்டியாரின் அருந்தமிழுக்கும் ஏற்ப அடங்கியிருக்கும் விஷயம் மிகப்பெரியதேயாகும். கல்வி கற்கும் மாணவர் மாணவிகட்கு இந்நூல் பெரிதும் பயன்படுமெனக்கருதி இதன் கண் பல அரிய நீதிகளை நன்கு விளக்கி யுள்ளேன். இந்நூலில் இடக்கரான பகுதி யொன்று மிலது. நற்குண

மும், நல்லொழுக்கமும், வீரமும், மன்னுயிரைத் தன்னுயிர் போல் மதிக்குந்தன்மையும் உள்ளவர், தேவர்முதற்கொண்டு யாவராலும் நன்கு மதிக்கப்படுவதுடன் நல்லபயன் அடைவர் என்பதை இந்நூலைப் படிப்பவர் உள்ளங்கை நெல்லிக் கனியென உணரா நிற்பர்.

தமிழகத்திலே மட்டுமன்றித் தரணியிலேயே பெருவள்ளளாகத் தோன்றி, பொருளுக்கும் பெருங்கொடைக்கும் பேர்பெற்று, நாட்டுமக்கள் உள்ளங்களில் நல்லிடம்பெற்று விளங்கிய தமிழ் நாட்டு வீரன் சரித்திரமாதலால் எல்லாவகுப்பிலுள்ள மாணுக்கர் மாணவிகட்கும் பாடப்புத்தகமாக வைக்கக் கருதி வாசிக்கமுடியாத இடக்கர் விஷயங்கள் இப்புத்தகத்தில்சேர்க்கப்படவில்லை. இந்நூலைப்படிக்கும்சிறுவர் சிறுமிகளின் எதிர்கால வாழ்க்கைக்கு இன்றியமையாத உற்சாகம் தூய்மை, உறுதி, தெய்வ பக்தி, கடமை, தருமசிந்தனை, வீரம் முதலிய உயர்குணங்களை அவர்களுள்ளத்தில் கிளப்பி தேசாபிமானிகளாக்கி சிறப்பை உண்டுபண்ணுமென்பது எனது துணிபு. இந்நூல் எழுதுவதற்கு ஆதாரமானவர்களில் முதலாவது எனது அன்னையும், இரண்டாவது சென்னை சைவபரிபாலன சபையின் உபதலைவரும், புலால்மறுத்தல் சங்கத்தின் அங்கத்தினர்களில் ஒருவரும் "லோகோபகாரி" பத்திரிகையின் ஆசிரியரும் எனது அன்பார்ந்த நண்பருமாகிய ஸ்ரீமான் பரலி சு நெல்லையப்பர் அவர்களுமாவார்கள். அவ்வியனருளாளர்களுக்கு யான் புரிதற்கேற்ற கைம்மாறு யாது?

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றலரிது" அன்றோ?

எனது அருமந்த அன்னையவர்கட்கு பணிவும் அன்பமைந்த வணக்கமும் நண்பருக்கு ஆசியும் கூறுகின்றேன்.

இந்நூல் 31-5-31ல் பர்மாவில் அவுட்டுவின் (Oktwin) கிராமத்திலுள்ள "மகாத்மா காந்தி பூஞ்சோலை" யில் நடந்த

'பாரிதிருநாள்' கூட்டத்தன்று என்னால் உபந்யாசிக்கப்பட்டு சென்னை லோகோபகாரி பத்திரிகையில் வெளிவந்ததை, புத்தகவடிவாக்கித்தர வேண்டுமென பல அன்பர்கள் கேட்டுக் கொண்டபடியால் அவர்களது எண்ணம் பூர்த்தி யாகுமாறு இதைச்சிறு நூலாக்கி "தருமதேவதாமலர்" என்ற தலைப்பில் முதலாவதாக வெளியிட்டுள்ளேன். எனது மற்ற நூல்களும் தருமதேவதாமலரில் தொடர்ச்சியாக வெளிவரும். இச்சிறு நூலைபுத்தகவடிவாக்கி சிரமம்கருதாதுவெளியிட்டுதந்த இரங்கோன் "நவீனகதாபுத்தக சாலையார்" அவர்களுக்கு எனது அன்பார்ந்த வந்தனத்தைச்செலுத்து கின்றேன். இந்நூலில் காணப்படும் குற்றங் குறைகளை தமிழுணர்ந்தோர் பொருந்துமாற்றில் அமைத்துக்கொண்டு தமது இயற்கை நற்குணத்தினால் பொருத்தருளும்வண்ணம் அறிவுடையாரை வேண்டுகின்றேன்.

"நல்லார் பிறர் குற்றம் நாடார் நலந்தெரிந்து
கல்லார் பிறர் குற்றங் காண்பாரே"
"குண நாடிக்குற்ற முநாடியவற்றுள்
மிகைநாடி மிக்கக் கொளல்"

"கற்றோர்கடா முகப்பர்கல்விதனிலாசையுள்ளோர்
பெற்றோமெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத்தா லிகழின் வந்ததென்னெஞ்சே யிகழ்கை
ஆச்சரிய மோதான வர்க்கு"

அடியேன் இச்சிறு நூலை எழுதவும் உபந்யாசிக்கவும் ஊக்கமளித்து ஆட்கொண்டு எனக்குத் தோன்றாத்துணையாக நின்று அநுக்ரஹம் புரிந்தவனும்சதா என்இருதய கமலத்தில் வீற்றிருப்ப வனுமாகிய எந்தை ஸ்ரீ திருநாராயணனை எனது மனம் மொழி மெய் களால் வணங்குகின்றேன். தருமமே ஜெயம்.

ஸ்ரீ: காந்திதாசன்.
பாரி பாரம்பரை.

ஆங்கீரசஹு சித்திரைமீ 1உ
பிரான்மலை.

ஸ்ரீ:

பொருளடக்கம்.

1. முகவுரை.
2. நாடு.
3. குலச் சிறப்பு.
4. பிறப்பும் பெயரும்.
5. வளர்ப்பும் படிப்பும்.
6. மணமும் மகுடாபிஷேகமும்.
7. ஆட்சி.
8. நாட்டு நிகழ்ச்சி.
9. முல்லைக்குத் தேரளித்தல்.
10. இளைஞர்கட்கு ஹிதோபதேசம்.
11. பெண்ணுக்கும் ஆண்மை வேண்டும்.
12. தெய்வ பக்தி.
13. மக்கட்பேறு.
14. காதல்கொண்ட பாதகர்கள்.
15. பெருவேந்தர் படையெடுப்பு.
16. வீராங்கனைகளின் வீரம்.
17. பெரும்போர்.
18. செங்கோல் வேந்தர் தீயெண்ணம்.
19. குதூகல வரவேற்பு.
20. பாரியின் பெருங்கருணை.
21. சேரசோழ பாண்டியர் தெரிசனம்.
22. தாரக மந்திர தியானம்.
23. பரம்பொருளின் அருந் தரிசனம்.
24. அருள் வேட்டல்.
25. வீராதி வீரன் வீரசுவர்க்கம்.
26 தீப்பாய்ந்த திருமகள்.
27. கொடுங்கோன்மை.
28. கபில முனிவரின் கவலை.
29. பாரிமக்கள் பரிதவிப்பு.
30. கவீஸ்வரியின் கருணை.
31. மூவேந்தர்கள் விஜயம்.
32. ஔவை பிராட்டியாரின் அற்புதம்.
23. இளவரசிகள் திருமணம்.
34. புகழ்ந்துரை.
35. முடிவுரை.

ஓம்.

*வேள் பாரி.

நாடு.

எந்நாட்டினும் சிறந்த நன்னாடெனப் பொன்னாட்டாரும் கொண்டாடும் தென்னாட்டின்கண் பல அறிஞர்கள் சூழ, "முதல் இடை கடை" என்று மூன்று சங்கங்களைக் கண்டதும், சந்திர வம்சத்தில் உதித்த பாண்டிய மன்னர்கட்குப் பரம்பரையானதும், அமிழ்தினும் இனிய தமிழ் மொழிக்குத் தாயகமாகியதும் பேரரசர்களையும், அறிஞர்களையும் பெரியோர்களையும், சாதுக்களையும், வள்ளல்களையும் தந்ததும், "தென்னாடு முத்துடைத்து" என்று புலவர் நற்றாயாகிய ஔவைப்பிராட்டியாரால் புகழ்ந்துரைக்கப் பட்டதுமாகிய "பாண்டிமண்டலத்திலே" பொன்மயிலும் சொன்மயிலும் போதமகிழ் சிறந்து விளையாட எல்லா வளங்களும் சிறிதுங் குறைவின்றி ஒருங்கே வாய்க்கப் பெற்றதும், அழகால் அமராவதியையும், செல்வத்தால் அளகாபுரியையும், அடக்கியாளும் தன்மையதாய் அமைந்ததும் "தென் நாட்டு மேருகிரி" என்றும் "தமிழ் நாட்டு இமயகிரி" என்றும் எல்லோராலுங் கொண்டாடப்படுவதும் மகரிஷிகளுக்கும் தபோதனர்களுக்கும் இரப்போர்க்கும், பண்டிதர்கட்கும், உறைவிடமா யமைந்திருப்பதும், உயிர் தரும் மூலிகைகள் நிறைந்த மலையை யுடையதும், சைவ சமயாசாரியராகிய சுந்தரமூர்த்திகளால் தேவாரத்திலும் திருவண்ணாமலை வரப்பிரசாதி யாகிய அருணகிரிநாதரால், திருப்புகழிலும், சிவநேசச் செல்வராகிய தவராஜர்கள்

* வேள்பாரி தமிழ்நாட்டிலே பறம்பு நகரை இராஜதானியாகக் கொண்டு ஆட்சிபுரிந்தவன். கடைஎழுவள்ளல்களில் முதன்மைபெற்ற குறுநிலமன்னன்

புகழும் பரஞ்சோதி முனிவரால் திருவாலவா யுடையார் புராணத்திலும் கபில முனிவரால் புறநானூற்றிலும் இன்னும் பல பெரியோர்களால் பல நூல்களிலும் புகழப்பட்டு, அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்று சொல்லப்படும் ஆறு அங்கங்களை யுடையதாய்த் தேஞ்சாருகிய திவ்ய மதுக் குழம்பானது பாய்ந்து தீஞ்சாலி விளையும் கழனிகளையுடையது மானது பறம்புநாடு. இப்பறப்பு நாட்டுக்குத் தலைநகரம் * பறம்புமலை (பிரான்மலை). இம் மலையில் பூமி மட்டத்தி லிருந்து உச்சிவரை பாரியால் கட்டப்பட்ட பழையகோட்டை உண்டு. மலையானது "ப" என்ற வடிவத்தில் தெற்குநோக்கிய முகமாக இருப்பதால் இதற்கு முற்காலத்தில் பறமலை அல்லது பறம்புமலை என்றும் தற்காலத்தில் 'பிரான்மலை' என்றும் வழங்கப்படுகிறது. கீழ் பக்க மிருப்பதற்குக் கைலைமலை அல்லது 'வெள்ளியங்கிரி' என்றும் அதை அடுத்து மேல் பக்கமிருக்கும் மலைக்கு 'இந்திரகிரி' என்றும் (வெள்ளையானை உருவிலுள்ளது) அதற்கு மேல்புற மிருக்கும் மலைக்கு 'பிரமகிரி' என்றும் (நான்கு சிகரங்களைக் கொண்டது) அதற்கு மேல் பக்கமுள்ள மலைக்கு 'செங்கண் மால் மலை' என்றும் (தெற்கில் சிரமும் வடக்கில் பாதமும் கிழக்கு முகமுமாயமைந் திருப்பது) பறம்பு நகரைத் தன் வயிற்றினுள்ளடக்கி மூன்று பக்கம் அரணாக அமைந்து போக்கு வரத்து சாதனங்கட்கு ஒரே பாதையாக இருப்பதால் வேற்றரசர் படையெடுத்துக் கொள்வதற்கு அரிது. இதனாலேயே பறம்பு நாட்டுக்கு இராஜதானியாக பறம்பு மலை அமைக்கப் பெற்றது.

குலச் சிறப்பு.

இருக்கு வேதத்திற் புகழப்பட்டதும் பாரதநாட்டுப் பழம் பெருங்குடிகளில் முதன்மையானதும் வேதகாலத்திற்கு முந்தியதுமாகிய பழங்குடியில் தோன்றி நவகண்

* பறம்புமலை பிரான்மலை இது பாண்டிநாட்டிலே மதுரைக்கு வடகீழ்பால் உள்ள நகரம்.

டங்களையும் ஒரு குடை நிழலில் ஏக சக்ராதிபதியாக அரசு புரிந்த நளனுக்குப்பின் நளனாகவும் பிரபல இராஜாக்களைத் தந்த யது பரம்பரையில் தோன்றிய கன்னனுக்குப் பின் இளங் கன்னனாகவும் தமிழ் முச்சங்கங்களும் சார்ந்த தலைமைப் புலமையரும் புலவர் நற்றாயுமாகிய ஔவைப்பிராட்டியாரால் "மெய்வந்தகோவலர்" என புகழ்ந்துரைக்கப் பட்டதும் கோபிகா வல்லபன் தோன்றிய கோகுலத்தார் பிரிவில் ஒன்றாகிய கொடையாளியும் மிழலைக் கூற்றத்துக்குத் தலைவனுமான வேளிர் பரம்பரையர் வழித்தோன்றிய அரசர்கள் பறம்பு நாட்டைத் தொன்று தொட்டு ஆட்சிபுரிந்து வந்தனர்.

பிறப்பும் பெயரும்.

வேளிர் பரம்பரையில் வந்த "யாதவவேள்" என்பவனுக்குப் பல நாள் புத்திரப் பேறின்றி வருந்தும் வருத்தந்தீர இற்றைக்கு சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன் உலகெலாம் புகழும் பரிதிவானவன்போல் நமது வள்ளற் பெருமான் தோன்றினன். அவனது மாதாபிதாக்கள் அவனது சாமுத்ரிகா லட்சணத்தையும் விசால நோக்கையும் உருவத்தையுங் கண்டு அன்பினும், அழகினும், மாபினும், செல்வத்தினும், கல்வியினும், கொடையினும், மலையினும், செய்கையினும், எல்லா வன்மைகளினும் பெரியவனாக விளங்கும்படி 'பாரி' எனப் பெயரிட்டழைத்தார்கள்.

வளர்ப்பும் படிப்பும்.

இளங் குமரனாகிய பாரியானவன் அரசர்க்குரிய நாலு வேதம் ஆறு சாஸ்திரம் பதினென் புராணம் முப்பத்திரண்டு தர்மம் அறுபத்தி நான்கு கலைஞானம் தொண்ணூற்றாறு தத்துவங்களையும் குறைவறக் கற்று சுந்தா மாரனோ கந்தர்வ குமாரனோ சுப்பிரமணியனோ, ருத்திர மூர்த்தியோ, செங்கண்மாலோ, தேவகுமாரனோ, எனச் சந்தேகிக்கும்படியாய் வளர்ந்து கல்வி கற்று விளங்கினன்.

மணமும் மகுடாபிஷேகமும்.

வேள்பாரியின் அழகையும் எழிலையுங் கண்டு அவனது மாதாபிதாக்கள், அன்பு, அழகு, மரபு, கல்வி, செல்வம், முதலியனவைகளிற் சிறந்து விளங்கும் கந்தர்வ குமாரியை நிகர்த்த கன்னிகையை வதுவைசெய்து பொதுவாகப்பூமண்டலமும் சிறப்பாக பாரத நாடும் பெருமையாகத் தமிழ்நாடும் மகிழ்ச்சியுறப் பறம்புநாட்டைப் பரிபாலனஞ்செய்யும் பாராளும் உரிமையாகிய பட்டாபிஷேகஞ் சூடப்பெற்று தனது குலத்திற் கொப்பக் காணுவதற்கு எளியனாகவும் இன்சொற் சொல்பவனாகவும் தருமத்திற் சிறிதுங் குறையாது தராசுமுனை போன்று நடுநிலை வகித்துச் செங்கோல் தாங்கி வந்தான்.

ஆட்சி.

நெல்லும் உயிரன்றே
நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே
மலர்தலை உலகம். (புறநானூறு)

முடிசூட்டு விழா முறையே முடிக்கப்பெற்ற பின் அடிபணியும் முடிவேந்தர் அருகே வர இன்னிசைப் பாணர் பண்ணார்ந்த பாட்டிசைக்க மகரயாழுங் குழையு மாறு மழலை மொழி பேசும் மங்கையர்கள் பல்லாண்டு பாட மங்கையர்க்கரசி மருண்டநோக் கமைத்த மான் விழியாள், கண்ணினைக் கவருங் கலாபமயில் போல்வாள், திருமகளையும் கலைமகளையும் நிகர்த்த செல்வியாகிய இளவரசியுடன் கண்ணினைக் காக்கும் இமை போலப் பன்னெடுங் காலம் பறம்பு நாட்டைக் கொற்றவன்காத்து வந்ததோடல்லாது அவனது சபையைச்சிறந்த பண்டிதைகளும் பண்டிதர்களுமிருந்து பிரகாசிக்கும்படி செய்தான். பண்டிதர்களையும் பண்டிதைகளையும் பிரஜைகளையும் இருகண்ணும் உயிருமென மதித்து ஆதரித்துக் காப்பாற்றி வந்தான்.

நாட்டு நிகழ்ச்சி

அன்பே ஆபரணமாகப் பூண்ட அரசர் பிரான் பாரி வேந்தன் ஆட்சியில் பறம்புநாட்டில் ஏழைகளும் கல்வியறிவில்லாதவர்களும் செல்வமில்லாதவர்களும் வியாதியாளர்களும் ஆறலைக்கள்வர்களும் இல்லை எனலாம். காணியில்லாதவன் மானியில்லாதவனென்றும் பொருளில்லாதவன் அருளில்லாதவனென்றும் சொல்வதற்கியலாது காணி நிலமும் கறவையும் மேதிகளும் இல்லாதார் இல்லை.

பாரிவேந்தன் வீராதிவீரனாகவும் சுத்த வீரனாகவும் சுதந்தர வீரனாகவும் தர்ம வீரனாகவும் அஹிம்ஸா வீரனாகவும் அறநூல் வழி நின்று வீண் வேற்றுமைகளும் காலத்திற்கு வேண்டாத பழக்கங்களும் முன்னேற்றத்திற்கு முரணான மூடக்கொள்கைகளும் ஒழித்துப் பொருள்வரும் வழிகளை மேன்மேலும் உண்டாக்கலும் அங்ஙனம் வந்த பொருளை ஒரு வழித் தொகுத்தலும் தொகுத்தவற்றை பிறர் கொள்ளாமற் காத்தலும் காத்தவற்றை அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுச் செலவுசெய்தலுமாகிய திறமை யுள்ளவனாகவு மிருந்தான். ஆடம்பரமில்லாது பெரியோர் திருநாட்களைக் கொண்டாடி எல்லா வகுப்பினரையும் சமரசப் படுத்துவான். திருநாட்கள் வெறு நாட்களாகாமல் பெரு நாட்களாகத் திகழச் செய்வன். இவனது ஆட்சியில் பறம்பு நாடு ஒரு தெய்வீக நாடாகவே விளங்கியது.

முல்லைக்குத் தேரளித்தல்

வேந்தர்களிற் புகழும் வேந்தனாகிய பாரி வேளானவன் ஒரு நாள் வசந்த காலத்தில் அந்திப்போதில் உயிர்த்துணைவியுடனும் அவளது தோழிகளுடனும் பொற்றேரேறிப் பூங்கா புக்கனன். பூங்கா புக்கலும் மந்தமாருதம் வந்து வந்துந்தி அந்தியில் இன்பம் அளித்திடக்கண்டு அகமிக மகிழ்ந்தான். சிங்கார பூக்காவைச் சுற்றினான். அங்கு ஓர் முல்லைக் கொடி கொழு கொம்பின்றி துவண்டு துவண்டு கீழ் வீழ்

வதும் மீண்டும் நிமிர்வதும் மீண்டும் தவழ்ந்து தவழ்ந்து விழ்வதையுங்கண்டான். காண்டலும் என்னே இளகிய மனம் ஆ ஆ! முல்லையே! கவலேல்! எனத் தனது புதுமையான பொற்றேரை அக்கொடியின் பக்கல் நிறுத்தி அக்கொடி படருமாறுவிடுத்துக் துணைவியுடனும் தோழிகளுடனும் கால்கள் சிவக்கப் பாதசாரியாக நடந்து இராஜமாளிகை சென்முன். இவ்வற்புதச் செய்கையைக் கண்டு இளகாத உளமும் வியக்காத சிந்தையுமுண்டோ? என்னே ஜீவகாருண்யம்! என்னே இரக்கச்சித்தம்! என்னே கருணை! என்னே அன்பு!

இளைஞர்கட்கு இதோபதேசம்,

இரப்போர்க்கு மட்டுமென்றி இயற்கைப் பொருளுக்கும் ஈந்த பெரும் தியாகியாகிய பாரியானவன் அற நூல் வழி நின்று ஆட்சிபுரிந்ததோடல்லாமல் இளைஞர்கள் விளையாடுமிடஞ் செல்வான். தன் அரண்மனைக்கு இளைஞர்களை வரவழைத்து உபசரிப்பான். உபதேசஞ்செய்வான். இளைஞர்களைப் பார்த்து ஹே வீர இளைஞர்காள்! நாட்டிற்கு ஆசுரவு வீர இளைஞர்களாகிய நீங்கள் தான்! எழிலுந் திருவும் இளமையினிடமே உள்ளன. இளமையே நாட்டின் சக்தி. வீரம், அன்பு, அழகு, இன்பம், தேஜஸ், சக்தி, தைரியம், சுகம், சுத்தம், சுதந்திரம், என்னும் குணங்கள் இளமை என்னுஞ்சொல்லில் ஒலிக்கின்றன. இக்குணமே உருவாய்த் திரண்ட வாலிபர்கள் கையில் தான் நாட்டின் முன்னேற்றம் உள்ளது. வீட்டிற்கு உயிர் இனிய மக்கள். நாட்டிற்கு உயிர் வீர வாலிபர்கள். வீரவாலிபர்களின், வாழ்வே நாட்டின் வாழ்வு. நாட்டின் சரித்திரம் வீர இளைஞர்களின் களிப்பேயாகும். நாட்டின் இன்பம் இளைஞர்களே! இளைஞரே நாட்டை இளமைப்படுத்துங்கள். நீங்கள்தான் நாட்டின் நரம்புகள். இளமையின் சக்தி அளவற்றது. அது செய்தற்கரியது ஒன்றுமில்லை. சமரசமும் அற உணர்ச்சியும் சுதந்தர சக்தியும் இளைஞர்களிடம் அதிகமாக வேண்டும். ஜன நாயக

முழக்கம் எண்டிசையும் பரவவேண்டும். எதி ரொலிக்க வேண்டும். தமிழணங்கு பாரத நாட்டிற்கு இப்பாலும் அப்பாலும் பரவி மொழியரசி யாகவேண்டும். தமிழிலக்கி யம் புதிய துறைகளிற் பொலியவும் தமிழர் வீரமும், செல்வ மும், அறிவும், ஒழுக்கமும், ஆற்றலும், பெற்று பூமண்ட லத்தின் மூலை முடுக்குகளிலும் கொண்டாடப்படவேண்டும். அதற்குத் தூதர்கள் வாலிபர்களாகிய நீங்கள்தான் இத் தகைய பெரிய காரியங்களை முன் னணியில் நின்று வெற்றி யுடன் நிறைவேற்றத் தங்கள் வாழ்வை அற்பணஞ்செய்ய யாரை நாடு கூவி யழைக்கின்றது. இளந்தமிழ் வீரர்காள்; உங்களையும் உங்கள் அருட் பணியையும் நமது நாடு எதிர் பார்க்கின்றது. நீங்கள் வருங்காலப் புத்தர்களாகவேண்டும். புத்தரைப்போன்று நாட்டிற்கு இரங்கி ஆருயிர்ப் பணிக்கே உங்கள் வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும். நமது நாடு இளம் வீர வாலிபர்க ளாகிய உங்கள் சேவையையே எதிர் பார்க்கின்றது. நமது நாட்டின் புகழ்க் கோட்டை உங்கள் சமரச முயற்சியாலேயே உயர்த்தப்பட வேண்டும். தொழில் முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, இயற்கை வாழ்வின் இன் பம், சுகாதார மேன்மை வியபார விரிவு, செல்வப் பெரு க்கு எல்லாம் இளைஞர்களாலேயே இயலும். ஹே, வீர அறி ஞர்களே! இளைஞர் ஒன்று சேர்ந்தால் எல்லாம் கைகூடும். உங்கள் ஒற்றுமையே நாட்டின் ஒழுக்கம். பறம்புநாடும் பாரதநாடும் வாழ்க என்று தமது இளமைப் பருவத்திற் கொப்ப இளைஞர்களுக்கு இதோபதேசஞ் செய்வான்.

பெண்ணுக்கும் ஆண்மை வேண்டும்.

செஞ்சொற் சுவை யறிந்த செல்வனாகிய பாரி வேளா னவன் பெண்மக்களை வரவழைத்து ஹிதமாகவேபேசுவான் லோக மாதாவின் உருவங்களே! லக்ஷ்மி தேவியின் அவ தாரங்களே! சரஸ்வதிதேவியின் சொரூபங்களே! ஔவைப் பிராட்டியாரின் அருஞ் சகோதரிகளே! நீங்கள் வீர இளை

ஞர்களுடன் ஒத்துழைத்த சத்தியபாமையைப் போலவும், கைகேசியைப்போலவும் வீராங்கனைகளாக வேண்டும் ராதாவைப் போன்று நேசத்தின் மீது பக்தைகளாக வேண்டும். நீங்கள் பெண் மக்கள். ஆண்மை எதற்கென எண்ணி சபலச் சித்தங் கொள்ளக் கூடாது. பெண்மக்களாகிய உங்களுக்கும் கல்வி, வீரம் முதலியன வேண்டும் சிறந்த பண்டிதைகளாகி ஆண்மையோடு வாழ வேண்டும். நீங்கள் வெறும் பொம்மைகளாகவும், பிள்ளைப்பெறும் யந்திரங்களாகவும் கருதி, சதாவீட்டினுள் அடைபட்டு அடிமையாகி இராமல், உங்கள் முன்னேற்றத்திற்காகவும், சுதந்தரத்திற்காகவும் போராடத்துணிய வேண்டும். "சர்வம் சக்திமயம் ஜகத்" என்பதை மறந்துவிடாது, உங்கள் சுதந்திர உணர்ச்சியைப்பற்றி அதிகமாக கவனித்தல் வேண்டும், என்று அன்புகூர, உபதேசம் செய்வான்.

மக்கட் பேறு.

ஊழி திரம்பினும் உரை திரம்பாத பாரி மன்னர்க்கு வதுவையும் மணி முடியுஞ் சூடப்பெற்று, பலஆண்டுகள் மக்கட் பேறில்லா திருந்தது. அதுகண்டு அழகில் திருமகளையும் கல்வியில் கலை மகளையும் நிகர்த்துநல் லொழுக்கம நிறைந்த குல மகளாகிய கோமகள் வேண்டுவார் வேண்டுவன வெல்லாந் தருந் தன்மைய தாகிய சிந்தாமணி போன்ற செங்கோல் வேந்தனிடம் குறையிரந்தாள்.

நாதா!

"படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணும்
உடைப் பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறு குறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந்தொட்டும் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடைஅடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறும் மக்களை இல்லார்க்கு
பயக்குறை தாம் வாழும் நாளே" —புறநானூறு.

என்று பன்முறை சொல்லிச் சொல்லிக் குறை யிரந்ததைக் கண்ட பாரிவேந்தன் அன்பின் வடிவாகிய கண்ணே!

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்லா பிற"

"எழு பிறப்பும் தீயவை தீண்டாப் பழி பிறங்கா
பண்புடை மக்கட் பெறின்" —குறள்.

என பாரத வேதம் முறையிடுகின்றதால் நமது பாரத நாட்டின் குலதெய்வமாகிய ஸ்ரீ கண்ணன் நம்குறையை அகற்ற வேண்டுமேயன்றி மற்றைமனிதரால் இயலுமா? இயலாது. ஆதலால் நாம் இருவரும் ஏக மனதாய் பகவான் கண்ணனை பக்தியுடன் தொழுது குறை யிரப்போமென்று பக்தி பூர்வமாக முறையிட்டார்கள்.

"பேரானை நொந்தழைக்கும் பேரானை
யாவர் செயும் பிழைகள் யாவும்
பாரானை அளந்துண்ட பாரானை
பண்ணவர்கள் பணி வைகுந்த
ஊரானை வஞ்சர்மன மூரானைப்
பகைவ ரஞ்சும் உவணப் புள்ளாந்
தேரானை நான்மறைகள் தேரானை
அனுதினமும் சிந்தை செய்வாம்"

"தீண்டா வழும்புஞ் செந்நீருஞ்
சீயும் நாம்புஞ் செழுந் தசையும்
வேண்டா நாற்ற மிகு முடலை
வீணே சுமந்து மெலிவேனோ?
தீண்டாய்தாண்டா விளக்கொளியாய்
நின்ருயொன்ருய் அடியாரை
ஆண்டாய் காண்டா வனமெரித்த
அரங்கா அடியேற் கிரங்காயோ"

"ஊழையே நொந்துநொந்து புண்ணுகி
உளமுலைந் துலைந்து நீருகுகண்
ஏழை மக்களுமே விரும்பியாங் குதவி
இயற்றுநாள் எந்தநாள் இயம்பாய்

ஏழையர் தமக்கன் பியைந்த நற்றுயே
ஏழையர் இன்னுயிர்த் துணையே
ஏழையர்க் குதவி இயற்றுவோர்க் கருளும்
எந்தையே அன்பெனும் இறையே"

எனத் தொழுது வந்தார்கள். சிலநாளில் குல மகளாம் கோமகள் கருவுற்று பத்து மாதஞ் சென்று பவளமலை போன்ற ஒரு பெண் மகவைப் பெற்ருள். பின்னுஞ் சில நாளில் கருப்பிணியாகி ஜோதி மலை போல மற்று மொரு பெண் மகவை ஈன்ருள். பாரியும், பாரியின் பாரியும் பறம்பு நாட்டு மக்களும் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தார்கள். இவ்விரு கண்மணிகளாகிய பெண் மணிகளையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து கபிலமுனிவரால் சகல சாஸ்திர சம்பன்னர்களாக்கி "பெண்மைக்கும் ஆண்மைவேண்டும்" என அரசர்க் குரிய சகல வித்தைகளையும் குற்றமறக் கற்றுத்தேர்ந்து சிறந்த பண்டிதைகளாக்கி பாரியின் சபையை அலங்கரித்ததோடல்லாது பாராளுமன்றத் திருக்கும் உரிமை யுடைய பக்குவிக ளாக்கினர்கள்.

காதல் கொண்ட பாதகர்கள்.

காதலென்பது அளவிடற் கரியவலிமை யுடையது. அது எவ்விதமான ஜாதிப் பாகுபாட்டையோ ஏற்றத் தாழ்வையோ தீண்டாமையையோ பாராது. எந்த இருதயத்தில் காத லுணர்ச்சி உண்டாயிற்ருே அந்த இருதயம் அது அவாவுகின்ற உருவத்தையே நாடி நிற்கும். மலைவந்து குறுக்கிட்டாலும் கடல் வந்து எதிர் நின்ருலும் காத லுள்ளம் தினைத் துணையும் கலங்காது. காத லில்லையேல் உலக வாழ்வு இல்லை. அங்கு யாவும் சாதல் சாதலேயாகும். இத்தகைய நிலைமை அமைந்த காதல் கொள்ளும் படியாகப் பங்கயப் புட்பத்துறை பங்கயனுனவன் பூமண்டலத்திலுள்ள பெண் மக்களின் அழகெல்லாம் ஒருங்கே திரட்டி உருக்கி வார்த்தது போல சாமுத்ரிகா லட்சணத்திற் சிறிதுங் குன்ருது அமைத்

திருந்தான். இவ்விரு பெண்களாகிய கண்களின் எழில் கண்டு சேர, சோழ, பாண்டியர்கள் கண்ணோட்ட மிட்டார்கள். காமப் பித்தேறிக் கலங்கினார்கள். மார னங்கணையால் மயங்கினார்கள். எனக்கு எனக்கு என எண்ணி எண்ணி ஏக்க மிட்டார்கள். மணம் புரிந்து வாழ வேண்டு மென மனக் கோட்டை கட்டினார்கள். "மையலார் மயலிற் பட்டார் தமக்கொரு மதி யுண்டாமோ" என ஒன்றுந் தோன்றாத வர்களானார்கள். காதல் யாரை விட்டது. "பேனப்பா எண்ணெயிலே மயங்குமாப் போல் பெரியோரும் பெண்ணென்றால் மயங்குவாரே" என்பதற் கிணங்க பித்தம் பிடித்து சித்தங் கலங்கியவர்களானார்கள். 'காதல் அல்லது சாதல்' என உறுதிகொண்டார்கள். பெருவேந்தர் களாகிய மூவேந்தரும் ஒருவேந்தனாகிய பாரி வேளிடத்துக்குத் தூதனுப்பினார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. வேந்தராயினும் சாந்தராயினும் ஒத்த வயது வேண்டு மல்லவா? அதைச் சிறிதும் உணராத மூவேந்தரும் நேரில் வந்து முறை யிரந்தார்கள். பாரியானவன் தனது அரும்பெருஞ் செல்விகளை அன்னையுடன் தனி அழைத்து மனதை அறிந்தான். இளவரசிகள் இருவரும் பெரு வேந்தர்கள் ஒத்த வயதின ரல்லாததால் வதுவைக்கிணங்காது மறுத்து விட்டார்கள். இச் செய்தி அறிந்த மூவேந்தர்களும் ஒன்று கூடிப் பாரிவேளின் தரும சிந்தையும்வீரமும் நம்மைமிஞ்சி நிற்கின்றது. அவனது இரு புதல்விகளும் நம்மை ஏளனஞ் செய்துவிட்டனர். ஆதலால் இதற்கு என்ன உபாயம் செய்யலாமென யோசித்தார்கள்.

பெரு வேந்தர் படையெடுப்பு.

முடி வேந்தர்களாகிய மூவேந்தரும் செய்த ஆலோசனையில் பாரி வேந்தனைச் சண்டையிட்டு வெல்வதெனத் தீர்மானஞ்செய்து படைதிரட்டிப் போர்க் கோலங்கொண்டு போர் முரசு கொட்டிப் பறம்பு நாட்டை முற்றுகையிட வந்தார்கள். இச்செய்தி அறிந்த வீராதி வீரனாகிய வில் வேந்தன், பாண்டவர் சகாயனாகிய ஆண்டவனது அடியிணையை

வேண்டி அவனது பூங்கழல் தொழுது பறம்பு மலையிலுள்ள பாசறையிலிருந்து படைகளை இறக்கிப் போர் முரசு கொட்டிப் போர்க் கோலங் கொண்டான்.

வீராங்கனைகளின் வீரம்.

சேரசோழ பாண்டியர்களின் மடமையையும் அவசரப் படையெடுப்பையுங்கண்ட வீராங்கனைகளாம் அங்கவை, சங்கவை என்ற யுவதிகளாகிய வீரப்பெண்மணிகள் இருவரும் கண்களில் கோபக்கனல்பறக்கப் பரபரப்புடன் யுத்தசன்னதர்களாகி மண்ணுலகில் வாழும் மாந்தராயினும் விண்ணுலகில் வாழும் தேவராயினும் தேவரிற் சிறந்த மூவராயினும், அறநெறி திறம்பியோரை அழித்தொழிப்போம். திரிபுரம் எரித்த விரிசடைத் தேவனையினும், குன்றமெறிந்து குரைகடலிற் சூர்தடிந்த குமரனே யாயினும், நேமியால்ஒறுக்கும் நெடுமாலே யாயினும் அவரை வென்றழித்து அறநெறி காப்பதே நமது கடமையாகும் என்று வீரமொழிகள் கூறி போர்க் கோலங்கொண்டு ஆயுதங்கள் தாங்கிப் புரவி மீதேறி போர் முரசு முழங்க உடைவாள் இலங்க மாற்றலர்கள் கலங்கத் தந்தைக்கு முன் சென்றார்கள். தந்தையின் எதிர் வந்து அன்புள்ள பிதாவே, நாங்கள் பெருவேந்தர்களுடன் சண்டை செய்து அவர்களைச் சிறைப் பிடித்து வரும்படியாக ஆக்ஞாபிக்க வேண்டும் என வணக்கமாகக் கூறி நின்றார்கள். இதைக் கண்ட வேள் பாரியானவன் புன்னகையோடு கண்மணிகளே! நீங்கள் வீரப்பெண் மக்கள் என்பதை நான் அறிவேன். ஆனாலும் இது சமயம் நீங்கள் உங்கள் அன்னையின் பக்கலிலிருக்க வேண்டும் என் மொழியை மறுக்காமல் இங்கேயே தங்கி விடுவீர்களாக என்று அன்பு ததும்பும் இன்ப மொழிகளால் கூறினன். இதைக் கேட்ட இரு கண்மணிகளும் மறுத்தொன்றுஞ் சொல்ல இயலாமல் தாயிடமே சென்று விட்டார்கள். பாரியானவன் முறுக்கு மீசை துடிதுடிக்க யுகாந்த கால ருத்ரன் போல கண்கள் சிவக்க மூவேந்தர்களின் பொறாமை

யையும் அறியாமையையும் கண்டு வியப்படைந்து வருந்தினான். சேனை சைன்யங்களை நடத்திக் கொண்டு யுத்த களத்துக்குச் சென்றான்.

பெரும் போர்.

மலைகளெனத் திரண்ட தோள்களையுடைய வீராதி வீரனாகிய பாரிவேந்தனானவன் வெற்றி மாலை புனைந்து வீரவாள் தாங்கிச் சூலாயுதம் ஏந்தித் தமது படைகளை அணியணியாக வகுத்து ஊழித்தீயென மூவேந்தர்களின்சேனை சைன்யத்தில் மோதிச் சின்ன பின்னமாகச் சிதற அடித்தான். மூவேந்தர்களும் அவர்களது சைன்யமும் சிறிதும் கலங்காது முன்னணியில் வந்து பாரியின் பறம்பரணை முற்றுகை யிட்டார்கள். இந்நிலைக்குச் சிறிதும் பாரி வேந்தன் அஞ்சாமலும் அவர்கள் தாக்குதலை போருட் படுத்தாமலும் ஊக்கங் குன்றினானில்லை ஆக்கங் கன்றினானில்லை. மிகு திறமையோடு அவர்களை முறியடித்தான். அம்முற்றுகைக் காலத்தே நகர மக்கள் வருந்தாமல் பாரிக்கு உயிர் தோழரான கபிலர் உள்ளே கிளிகளை வளர்த்துப் பழக்கி அரணுக்கு அப்புறமுள்ள விளை நிலங்களிலிருந்து நெற்கதிர்களை நாளுங் கொண்டு வரும்படி செய்து பாரியின் குடிகளைப் பாதுகாத்து வந்தார். முற்றுகை யிட்ட மூவேந்தரும் நெடுங்காலம் வரை வெற்றியின்றிப் பாரியின் சேனையாற் பரிபவப்பட்டு நிற்கலானார்கள். ஹேமந்தருதுவில் ஆரம்பித்த யுத்தம்சிசிருதுவந்தும் (மூன்று மாதகாலம்) முடிவுபெறவில்லை. அதுகண்ட புலவர் பெருமானாகிய கபிலர் வெளியேவந்து மூவரையும் நோக்கி "நீவிர் மூவரும் ஒன்று கூடிப் படை வலி பெரிதுங்கொண்டு எத்தனையோ காலம் முற்றுகை செய்யினும் பாரியினது இப் பறம்பு மலையைக் கொள்ளுதல் அரிது. அவனது முந்நூறூர்களையும் பாடிப்பாடிப் பரிசிலர் பெற்றனர். நீவிரும் வீணை தாங்கிய கரத்துடன் பாடினவராய் வரின் இதனைக் கொள்ளுதல் எளிது." என்று பாரியது புரவலர்க் கருமையையும் இரவலர்க்கு எளிமையையு மாகிய பெரு நிலையைத் தமது பாடலால் அழகாக வெளியிட்டனர். அதனைக்கேட்ட மூவேந்தரும் சமாதானத்தோடு திரும்பிவிட்டனர்கள்.

செங்கோல் வேந்தர் தீயெண்ணம்.

பெண்ணாசை கொண்டோர்கட்கும் அவர் தம் குழுவினர்கட்கும் எவ்வித ஹிதோபதேசஞ் செய்தாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்கையொக்கு மென்பது முன்னோரின் மூதுரை. அவர்கள் அரசர்களானதால் தாங்கள் நல்வழியில் நிற்க்க வேண்டியதிருக்கத் தீங்கெண்ணங் கொண்டு வசந்த ருதுவில் மூவேந்தர்களும் சதியாலோசனை செய்து குறுநிலமன்னனாகிய பாரியின்புகழானது பறம்பு நாட்டு எல்லையைக் கடந்து தமிழுலகையுந் தாண்டி பாரத நாடு முழுமையும் பரவியதோடல்லாது பாரத நாட்டுக்கு அப்பாலும் சென்று விட்டது. பூ மண்டலத்தின் மூலை முடுக்குகளிலும் 'பாரி பாரி' என்று புகழ் ஓங்கிவிட்டது. மணி முடிவேந்தர்களாகிய நாம் மங்கிவிடும்படி செய்து விட்டான் பாரி. பாரியின்மக்களாகிய பெண்கள் கூட நம்மை மதியாது பரிகசித்துவிட்டனர். படையும் திரட்டி வந்தனர். நமது நெஞ்சம் கலங்கிக் கண்ணீர் உதிர்க்கச் செய்தனர். நாம் அதனால் அருமணி இழந்த நாகம்போலானோம். பாரியின் புகழையும் பரிசிலர்க்கு உதவுந்திறமையும் கபிலரால் கூறக் கேட்டோமல்லவா? அவர் கூறியபடியே யாழேந்திய கையராய்ப் பரிசிலர் போற் சென்று எல்லாவற்றையும் இரந்து அவனது உயிருக்கு இறுதி தேடவேண்டும் எனச் சதியாலோசனை செய்து முடித்தார்கள். தீர்மானித்தபடியே யாழேந்தி யாசகரைப் போலப் பறம்பு நகரை அடைந்து காவலாளர் மூலம் தெரியப்படுத்தி மூ வேந்தரும் இராஜ மாளிகையிற் பிரவேசித்தார்கள்.

குதூகல வரவேற்பு.

ஓரறிவுடைய அஃறிணைப் பொருளும் ஓருயிரென மதித்துப் பொற்றேரை நல்கிய உத்தமனாகிய பாரி வேந்தனவன் பரிசிலர்களாக வந்த மூவேந்தர்களையும் அன்புடன் வரவேற்றான். ஆசனத் தமரும்படியாக உபசரித்தான். இரண்டொரு நாள் சென்று மூ வேந்தர்களாகிய

பரிசிலர் வந்த விஷயத்தை அன்புடன் வினவினன். அதற்குப் பரிசிலர்களாகிய மூ வேந்தரும் "அரசே! தாங்கள் பெருந்தியாகி என்றும் கொடை வள்ளல் என்றும் தர்ம வீரனென்றும் கேள்வியுற்று வெகு தூரத்திலிருந்து கால்நடையாக வந்தோம். நாங்களோ பரிசிலர்கள். எங்களுக்குத் தக்க பரிசு அளிக்க வேண்டும்" என இரந்து நின்றார்கள்.

பாரியின் பெருங் கருணை.

குன்றுலப்பினும் உலப்பிலாத் தோள்களையுடைய வெற்றி வீரனானவேள் பாரியானவன் தனது மாட்சிமையை அழித்து ஆட்சியைக் கைப்பற்ற வந்ததோடல்லாது ஆருயிரையும் அந்தகன் உலகனுப்ப வந்ததை அறியாது யாசித்து நின்ற பரிசிலர்களாகிய சேர சோழ பாண்டியர்களைப் பார்த்து ஐயன்மீர்! எனது முன்னூறு ஊர்களையும் தங்களைப் போன்ற பரிசிலர்கட்கே தானமாகக் கொடுத்து விட்டேன். இனி என்னிடம் எஞ்சியுள்ளது இம்மலையொன்றே. இம்மலையானது மிகச் சிறப்பு வாய்ந்தது. தேனருவித் திரையானது வானத்திலெழுந்து செங்கதிரோனின் தேர்க்காலிற் கட்டிய குதிரைகளினுடைய கால்களை வழுக்கச்செய்யுந் திறமையுடையது. இதில் வசிப்போர்க்குப் பிணி பசி துன்பம் அணுகாது. இதை மூவரும் அன்புடன்பெற்றுக்கொள்ளுங்கள். எனச் சொல்லிப் பரிசாகக் கொடுத்து விட்டான். பறம்பு மலையைப் பரிசாகப் பெற்ற பரிசிலராகிய சேரசோழ பாண்டியர்கள் உலகம் போற்றும் உத்தமனாகிய பாரி வேந்தனை நோக்கி "அரசரேறே! குன்றாத புயவலியை யுடைய கோமானே! வீரஞ் செறிந்த உள்ளத்தையுடைய வேந்தே! சுதந்தர வீரனே! தியாக மூர்த்தியென எல்லோராலுங் கொண்டாடப் படுபவனே! தாங்களோ முல்லைக்குத் தேரளித்த பெருங்கருணை வள்ளல்! ஆனதால் மலையைக் கொடுத்தது பெரிதல்ல உங்கள் உயிரை கொடுகக் வேண்டும். என யாசித்து நின்றார்கள். உடனே அருளொழுகுங் கண்ணனாகிய ஐயன்! "வருந்தும் ஓர் மிடியன்

சேம வைப் பெதிர் கண்டாற் போல'' மகிழ்ச்சியின் மேல் மகிழ்ச்சி பொங்க பரிசிலர்களை மகிழ்ச்சியுடன் நோக்கி உதவாட்கில்லா இவ்வுயிர் எற்றுக்கு? இதோ தந்தேன் அன்புடன் பெற்றுக்கொள்ளுங்கள் என உயிரையுந் தாரை வார்த்து விட்டுப் பரிசிலர்களை உற்று நோக்கி நீவிர் யாவிர்? என வினவினன். பரிசிலர் மூவரும் அரசர்களென அறிந்தான். போலி உருவைக் கலைத்துப் பொய்யில்லா மெய்யுருவை அரச உருவத்தை எடுக்கச் சொன்னன்.

வீர சுவர்க்கம்

பொய் வேடம் பூண்டு புலவர்கள் போன்று வந்த புரவலர்களும் சுரவில்லா உருக் கொண்டார்கள். சேர சோழ பாண்டியரானுர்கள். அவ்வுருவைக் கண்ட பாரி வெந்தன் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தான். அவனடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. முன்னினும் உடல் பூரித்தான். அவனது முகாரவிந்தம் பொலிவுற்றது. கருணை ததும்பியது, வள்ளற் றன்மை வழிந்தோடியது. சிவத்துப் பருத்த மேனியும், கறுத்து நீண்ட முறுக்கு மீசையும் அமைந்த வீரனுகிய பாரி வேளானவன் பெரு வேந்தர்களாகிய மூ வேந்தர்களே! என்ன புண்ணியஞ் செய்தேன்! என் பாக்கியமே பாக்கியம்! எவர்க்குண்டு இந்த சிலாக்கியம். எனது அற்ப உயிரைத் தங்களுக்குத் தானமாகக் கொடுத்து விட்டேன். அன்புடன் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லித்தாரக மந்திரமாகிய 'ராம' மந்திரத்தை உச்சரித்து,

"பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம்
கொழுந்தே! யென்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே! (1)

வேதநூற் பிராயம்நூறு
மனிதர் தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப்போகும்!
நின்றதிற் பதினையாண்டு
பேதை பாலகன தாகும்
பிணி பசி மூப்புத் துன்பம்
ஆகலாற் பிறவி வேண்டேன்
அரங்கமா நகருளானே! (2)

தவத்துளோர் தம்மி லல்லேன்
தனம் படைத்தாரி லல்லேன்
உவத்த நீர்போல வென்றன்
உற்றவர்க் கொன்று மல்லேன்
துவர்த்த செவ்வாயினார்க்கே
துவக்கறத் துரிசனானேன்
அவத்தமே பிறவி தந்தாய்
அரங்கமா நகருளானே!" (3)

தரிசனம்.

வெண்பா.

"திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழும்
அருக்கனணிநிறமுங்கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழிகண்டேன் புரிசங்கங்கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பாலின்று!" (1)

"இன்றே கழல்கண்டேன்! ஏழ்பிறப்புமயானறுத்தேன்!
பொன்தோய்வரைமார்பிற் பூந்துழாய்—அன்று
திருக்கண்டுகொண்டதிருமாலே! உன்னை
மருக்கண்டுகொண்டேன் மனம்" (2)

வேறு.

"குலந்தருஞ் செல்வம் தந்திடும் அடியார்
படுந்துயராயின வெல்லாம்
நிலந்தாஞ்செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டுகொண்டேன்
"நாராயணா" எனும் நாமம்" (3)

வேண்டுதல்.

தருமமெனும் நல்வழியில்
தானிருத்தல் வேண்டும்!
தரணிபுகழ் பறம்பு நகர்
தன்னில் ஜெனிக்க வேண்டும்!
பெருமையுறும் பறம்புநா
டாக்ஷிசெய வேண்டும்!
பிறவுயிரை என்னுயிராய்ப்
பேணு திறம் வேண்டும்!
ஒருமையுடன் எவர்மனமும்
துணுக்கமுறுவாறே
உரைத்திடுதல் வேண்டுமலா
உரைநீத்தல் வேண்டும்!
அருமறைகள் துதிபுரியும்
ஆயர்குலக் கொழுந்தே!
ஆண்டவனே! அடியவனேன்
வேண்டலிவை ஐயா! (1)

என்று மௌனநிஷ்டையிலிருந்தான் இதைக்கண்ட மூவேந்தரும், பொய் வீணையிலிருந்து வாளை யுருவி ஒரே வீச்சில்

"லோகோபகாரி" ஒரு சிறந்த தேசியப் பத்திரிகை காந்தியத்தைத் தழுவி வெளிவருவது வருடசந்தா ரூபா நான்கு சென்னை.

பாரியின் உயிரைப் பறித்து, வீரர்கள் வாழும் வீர சுவர்க்கத்திற்கு அனுப்பி வைத்தார்கள். வீராதி வீரன் வேள்பாரி வீரலட்சுமி சமேதனாக வீர சுவர்க்கம் புகுந்தான்.

தீப்பாய்ந்த திருமகள் !

வீரஞ் செறிந்த உள்ளத்தனாய் இலங்கிய வேள்பாரியின்பால் என்றும் மறவாத அன்பு பூண்டொழுகிய பெருமகளான குலமகளாம் கோமகள், அற்றார் அழி பசியையும் அடையார் கொடுந்திறலையும் அழித்துத், 'தோன்றிற் புகழோடு தோன்றுக" என்னும் பொய்யா மொழியார் அருளிய இலட்சியமாகவே அமைந்து அரும் புகழ்பெற்ற அண்ணலை, புலவர்கள் மனமாறப் புகழ்ந்து போற்றும் பூமானை, நல்லோர் நலமுற வாழ்த்தும் நாயகனை, சஞ்சலங் கலந்த செஞ்சொற் கவி வாணர்க்குக் கனகமாரி சொரிந்து அவர்கள் பாமாலை பெற்று விளங்கிய காவலனை, பொங்கும் மழையும் புயற் காற்றும் எங்கும் நிறைந்து செந்தமிழ்த் தேனருவி திகழும் பறம்பு மலைச் சோதியை, வீரன் பாரியை மணாளனாகக் கொண்ட மெல்லியலாள், பாரி 'பரமபதம்' அடைந்ததைக் கண்டு மாசற்ற மணிகளா லமைந்த அணிகலன்களை அங்குமிங்குஞ் சிதறினாள். நறுநெய் பூசிய கருங்கூந்தலை அவிழ்த்து விரித்தாள். காவி மலர் போன்ற கண்களில் தோய்ந்த அஞ்சனங் கரையுமாறு கண்ணீர் உகுத்தாள். பூவுதிர்ந்த பூங் கொம்பு போல பூமியில் வீழ்ந்தாள், துடித்தாள், துயருற்றாள், நம் வாழ்நாள் இன்றுடன் முடிந்ததெனஉறுதி பூண்டாள். அருமைக் குமரிகளை அரசுரிமைக்குரிய அரசிளங் குமரிகளை, அங்கவை சங்கவையை, உன்னி உன்னி அகங்குழைந்து அலறினாள். அன்புத்தேனும் வெள்ளருவித் திரையுங் கொழிக்கும் பறம்பு மலையை, வந்த விருந்துக் களித்துவரும் விருந்து பார்த்திருக்கும் சிந்தையை யுடைய பறம்பு நாட்டு மக்களை, எண்ணி எண்ணி ஏக்கமுற்றாள், உடனே மறந்தாள். அரச போகத்தையுந் துறந்தாள், உயிர் போனால் உடல் பிழைக்குமா? உடன்கட்டை யேறுவதெனத் தீர்மானித்தாள். பாரியின் பருத்த உடல் நல்லடக்கஞ

செய்யப்படு மிடத்திற்குச் சென்றாள். தீந் தமிழ்த் தேவி யைத் தொழுதாள், தானும் * தீக்குளித்தாள். தமிழகத்து மாதர் தமதம் காதலர் பால்கொண்டொழுகும் அன்புடைமையை அறிஞர் தலை, இடை, கடை எனப்பிரித்துள்ளார்கள். காதலர் இறந்த அக்கணமே தானும் உயிர்விடுபவர் தலையன்புடையார் என்றும், அவ்வாறு உயிர்விடாது எரியிடைப்புகுந்து வலிதில் உயிர்விடுபவர் இடையன்புடையார் என்றும், அவ்வாறும் உயிர்விட ஆற்றாது மறுபிறப்பிலேனும் தன் அன்பரோடு உடனுறை வாழ்க்கையே விரும்பி அதற்கேற்ற நோன்புகளை அனுஷ்டிப்பர்கடையன்புடையார் என்றும் கூறுவர் பெரியோர்.

இதனை, ' காதலர் இறப்பின் கனை எரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது
இன்னுயிர் ஈவர் ஈயாராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளி எரிபுகுவர்
நளிஎரிபுகாஅர் ஆயின் அன்பரொடு
உடன்உறை வாழ்க்கைக்கு நோற்று உடம் படுவர்''
(மணிமேகலை.)

ஆ! என்னே அன்பு! என்னே துணிவு! என்னே வீரம்! கற்பரசிகளின் லட்சணம் இதுதன்றோ! என்று பறம்பு நாட்டு மக்கள் மகிழ்ச்சி ஒருபுறமும், துக்கமும் துயரமும் மற்றொரு புறமுமாகப் புலம்பினார்கள். பாரிவேளையும் அவனது பாரியையும் சுவர்க்க லோகத்திலேயே என்னாளும் இருக்கும்படியாக அருள்புரிய வேண்டுமென பறம்புமலைத் தெய்வத்தைத் தொழுதார்கள். அன்பர்களே! பாரியின் அரும் பெரும் செல்வங்களாகிய அரசிளங் குமரிகள் மூவேந்தர்களின் மூடச்செய்கையைக் கண்டு வருந்தினார்கள், அழுதார்கள். அலமருந் தார்கள், அவர்களது அழுகையைக் கண்டு வானாட்டு மக்களும் அழுதார்கள். ரிஷப வாக

* தீக்குளித்தல்—உத்தம மனைவியர் நாயகன இறந்த பின் உலக வாழ்வை நீத்து உடன்கட்டை ஏறுதல். இது உத்தமிகளின் இலட்சணம்.

னத்தை யுடைய சர்வேஸ்வரன்பங்கிலுரையும் பார்வதிதேவியும் அழுதாள். தாமரை மலரில் வீற்றிருக்கும் லட்சுமிதேவியும் அழுதாள். ஈசன் சடாபாரத்திலுள்ள கங்கா தேவியும் அழுதாள். அன்ன வாகனத்தை யுடைய பிரம்ம தேவன் பாரியாகிய சரஸ்வதியும் அழுதாள். பறம்பு நகர்த் தெய்வமும் அழுதது. வான் அழுதன. மண் அழுதன, மரங்கள் அழுதன, மக்களும், மாக்களும் அழுதனவென்றால் அவர்களது நிலையை நான் சொல்லும் சக்தியுடையவனோ? நீங்களே அவர்களது நிலையை எண்ணித் தெரிந்து கொள்வீர்களாக. அந்தோபாரி அழியாப் பதம் பெற்றதைக் கண்டு கபில முனிவரும் அழுது வருந்தி அரசிளங் குமரிகளைக் கொண்டு இருவருக்கும் ஈமக்கடன் முடித்தார்கள்.

கொடுங்கோன்மை.

இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத நெஞ்சினராகிய அரக்கர் போன்ற மூவேந்தரும், கார்மேகத்தினிடையே தோன்றிய கதிரவன் போன்று அறம் தளராப் பறம்புநாட்டை ஆண்டு, செந்தமிழின்சுவைதேர்ந்த எந்தையாகிய "பாரிவேந்தன்" பாராளுதலைக்கண்டு பொறாமை கொண்டு, இயர்க்கைவளமிகுந்த மலையையும், செல்வங்களையுங் கவர்ந்ததோடல்லாது, சிரிய உயிரையும் பறித்து தென்னவனாகிய பாண்டியனிடம் பறம்புநாட்டை ஒப்படைத்து விட்டு, சேரனும் சோழனும் தமது திருநாட்டுக்குச் சென்றார்கள். கல்வி மலிந்த பறம்புநாட்டை பாண்டியன் தன் நாடடுடன் சேர்த்து பண்டிதர்கட்கும் பிரஜைகட்கும் துன்பம் விளைவித்துக் கொடுங்கோன்மை புரியலானான். பண்டிதர்மலிந்த பறம்புநாட்டு மக்களைப் பரிதவிக்கச் செய்தான். பாராளுதற்குரிய பாவையர்கட்கு தீரா ஊறு விளைவிப்பதே சிந்தை குடிகொண்டான். "துரைத்தனஞ் செய்யும் துரைமக்களை குடித்தனத்திற்கும் உதவாமற் செய்கிறேன்" என வஞ்சினங் கூறினான். "குடி தழுவிக் கோலோச்சு மாநிலமன்னனன் அடிதழுவி நிற்குமுலகு"

என்பதை மறந்து கொடுங்கோல் செலுத்துவானாயினன். அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்ற பறம்பு நகர் மக்கள் பாண்டிமன்னன் கடுஞ்சொல்லையும் கண்ணில்லாச் செய்கையையும் கண்டு கலங்கினார்கள். செந்தமிழ் வேந்தன் செங்கோல் வெங்கோலாகத் திகழ்ந்தது மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை என்பதை மறந்து வெங்கோன்மையால் மன்னுவான் இன்னு செய்கலை ஏற்கமறுத்தார்கள். * தென்னவன் பறம்புநாட்டு மக்களுக்குத் தென்னவனாகத் தோன்றினான். இஃதுணர்ந்த கபில முனிவர்;

"கொடுங்கோன் மன்னன் வாழும் நாட்டிற்
கடும்புலிவாழும் காடுநன்றே"

என்னும் சீரியமுறையை சிந்தையிற்கொண்டு சிந்தித்துச் சிந்தித்துச் செங்கோலறத்தின் திறமையறியாதென்னவனை சீறிச் சினக்காமல் தனது உயிர்த்தோழனாகிய பாரியின் மக்களைக் கூட்டிக்கொண்டு பறம்புநாட்டைத்துறந்து வேற்றாருக்குப்பயணமானார். பாரிவேந்தன் மக்களும் கண்ணீரும் கம்பலையுமாகி தலைமேற் சுமந்தகையுராய்க் கதறிக்கொண்டு தாயையும் தந்தையையும் இழந்து பறம்புநகரைத் துறந்து வளர்ப்புத்தந்தையும் வித்யாகுருவுமாகிய கபிலமுனிவர் முன்னடக்கவும் பின்னால் மெல்ல மெல்ல வழிநடக்கலானார்கள். வயோதிக வயதடைந்த அந்தணப் பெரியாரும் மங்கைப்பருவமுற்று காவென்பதை யறியாக் கன்னியர்களும், நடந்த காக்ஷி பரிதாபகாக்ஷியா யிருக்குமன்றோ? "குன்றத்தனையிருநிதியைப் படைத்தோர் அன்றைப்பொழுதே அழியினும் அழிவர்" என்பது இதனால்நன்கு விளங்குகிறதல்லவா!

கபிலரின்கவலை

அந்தோ! வேரொடு மூவர் தம் புகழ் விழுங்கிய வேந்தனாகிய வீரஞ் செறிந்த உள்ளத்தையுடைய வேள்பாரியின் மந்திரியும், உயிர்த்தோழனும், அந்தணப் பெரியாரும்

* தென்னவன்—பாண்டியன்—எமதருமன்.

புலவர் பெருமானுமாகிய 'கபிலமுனிவர்' பாரியின் நட்பை எண்ணி எண்ணி ஏக்கமுற்றுர். பெரு வேந்தர்களின் சிறு குணத்தையும் பாரி வேளின் பெருங் கருணையையும் நினைந்து நினைந்து நெக்கு நெக்காக நெஞ்ச முருகினர். வேள் பாரியின் இரு கண்களாகிய பெண்களை அங்கவை சங்கவையை, பறம்பு நாட்டுச் செல்வங்களை, அரசுரிமைக்குரிய அரச குமாரிகளை, துறைத்தனஞ்செய்வதே தொழிலாகக் கொண்ட துரைமக்களை, ராணியர்களாகியஇருவரையுங் கூட்டிக்கொண்டு முதுமை பருவத்தில் தன்னைப் போற்றிவந்த கருணை வள்ளல் வாழ்ந்த பறம்புநகரையும் மலையையும், * பறம்பு நாட்டையும்பிரிய மனமில்லாமல், அரசனுக்குற்ற அநியாயத்தை சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தை நொந்து புலம்பி பாரிவேளின் அரசிருப்பையும், பெரு வாழ்வையும், கொடைச் சிறப்பையும், வீரத்தன்மையையும், மறக்க முடியாதவராக வருந்தி, இரு பெண்மணிகளுக்கும் தக்க நாயகனைத்தேடி மண முடித்து நட்புக் கடனைக்கழிக்கக் கருதிப் பறம்பு நகரைத் துறந்து வேளிர்குலத் தலைவனுகிய, 1இளவிச்சிக்கோவையும், 2இருங்கோவேளையுங்கண்டு, பாரி குமாரிகளை மணக்கச் சொல்ல, அவர்கள் வேள் பாரிக்கும் பெருவேந்தர் மூவருக்கும் உண்டான பகைமையை எண்ணி இருவரும் முடியாதென மறுத்துவிட அதன்பின் 3 திருக்கோவலூரை யடைந்து தமக்கு வேண்டிய அந்தணர் அகத்தில் சிலாது பாது காவலில் வைத்து வடக்கு நோக்கிச் சென்றனர்.

---

* பறம்புநாடு கிழக்கில் திருமெய்யம், தெற்கில் கானப்பேர், நட்டரசன்கோட்டை, மேலூர், மேற்கில், திண்டுக்கல், வடக்கில் பிணறற்பாறை. விராலிமலை.

1 இளவிச்சிக்கோ பாரியின் நெருங்கிய உறவினன்.

2 இருங்கோவேள் இவனும் பாரியின உறவினனே.

3 திருக்கோவலூர் தென் பெண்ணைநதிதீரத்தில் திருவண்ணுமலைக்கு சமீபம். அரகண்டநல்லூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு தெற்கு மூன்றுமைல் தூரத்திலுள்ள அழகியநகரம்.

பாரி மக்கள் பரிதவிப்பு.

மாசிலாப் பறம்பு நாட்டில் மறம் தளரவும், அறம் வளரவும், செங்கோலோச்சிய வேள் பாரியானவன், மண்ணுலக வாழ்வை நீத்து, விண்ணுலக வாழ்வை விரும்பியவுடன், நெஞ்சங் குழைந்து நெடுங் கண்ணீர் உதிர்த்த அங்கவை சங்கவையின் அருந்துயரை அகற்ற எண்ணி கூட்டிச்சென்ற கபிலர் போனவுடன், அவ்விரு பெண்மக்களும் வாய்மை தவறாது வையகம் காத்து, வாய்மைக்கே உயிர் வழங்கிய வள்ளலாகிய தந்தையையும், தாயையும், நாட்டையும், நாட்டு மக்களையும், மலையையும் நினைந்து நினைந்து நெஞ்சங் குமுறினார்கள். இரவலரைக் காக்கும் பெருமை சான்ற புரவலனை, நல்லறத்தைக் காக்கும் வில்லேருழவனை, பொறுமை என்னும் பெருமை சான்ற புண்ணியனை, இரவலரை வாட்டி வருத்தும் வறுமை நோய்களையும் வள்ளலை, பறம்பு நாட்டை குற்றமறப் பாதுகாத்த பாரி மன்னனை, பூமண்டலமெல்லாம் புகழ்தற்குரிய புண்ணியனை, அடாத செயல் செய்யும் ஆதரையும் ஆதரித்துத் தாங்கும் நெடு நிலம்போல மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தகுதியால் வெல்லுந் தகைமையுடைய தருமக் குன்றை, கரவலரும் சற்பகமுந் தோற்குமாறு இரவலர்க் குதவிய யதுகுலாதிபனை, விண்ணுலகில் வாழும் விழுமிய கற்பகமும், வானகத்தே உலாவும் மதியமும், நீராடை புனைந்த நெடு நிலமும் நிமிராமல் அரசு புரிந்த நேசனை, எழையேம் இனியென்று காண்பேம் என எண்ணி எண்ணி ஏங்கினார்கள். பாராளுதற்குரிய தந்தை வானுளச் சென்றனனே எனக் கரைந் துருகினார்கள். வருந்தி வந்தடைந்த மாந்தரது வறுமை அகற்றி, அவர் தம் திருந்திய முகங்கண்டு திளைக்கும் தந்தையைக் காணாது இரவலர் இனி ஏன் செய்வார் என்று இரங்கினார்கள். முறை செய்து காப்பாற்றும் மன்னவன் ஆட்சியில் செவ்வையாய் மணங் கமழ்ந்த நல்லறம் இனி எவ்வாறு ஆகுமோ என்று சிந்தை

நொந்தார்கள். கார்மேகம் போல வழங்கும் தார் வேந்தனுகிய பாரி வேந்தன் நல்லறமும் வாடி வருந்திற்று. நேசமென்னும் பாசத்தை நெகிழாது காத்த புகழ் வேந்தனை நினைந்து நினைந்து பொறுக்க லாற்ருத பெருந் துயரால் பலவாறு புலப்பி நிற்கும் பெண்மக்கள் அமர்ந்திருந்த அகத்தை அணுகி அவ்வழியாக வந்த அருந்தமிழ் ஔவைப் பிராட்டியார் இஃதுணர்ந்து அந்தோ! வாய்மை வழுவாத வேந்தே! சிலம் நிறைந்த மேலோர் நாவில் நின்றெழும் செம்மலே! கண்ணற்ற காலன் மாயும் உடலை மண்ணுலகில் விட்டு மாயா உயிரை விண்ணுல கேற்றினனே என்று வருந்தினர். உடனே வருந்திய கிழவியைப் பெண்மணிகளாகிய கண்மணிகள் இருவரும் திருந்திய முகத்துடன் ஆடைவழங்கி அமுதளித்து உபசரித்தார்கள்.

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமன் னாளும் அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் — ஏற்றவர்க்கு
நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தாராலும்
இல்லை என மாட்டார் இசைந்து.

என்பதைத் தமிழுலகுக்குதவிய கவீஸ்வரியும் புலவர்நற்ருயுமாகிய மூதாட்டியார் "பாரி பறித்தபறியும் பழயனூர்க் காரி கொடுத்தகளைக்கோலும் சேரமான் வாராஎனவழைத்த வார்த்தையுமிம்மூன்றும் நீலச்சிற்றாடைக்கு நேர்" என அப்பெண் மக்களைப்புகழ்ந்துபாடி சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர் களுக்கும் திருமுகம் அனுப்பிப் பாரி மக்களைத் தாமே சிறப்பிக்க எண்ணித் திருக்கோவலூரை ஆண்ட தெய்வீக ராஜனுக்கு மணம்பேசி, மூவேந்தர்களையும் வாவழைத்துப் பல அற்புதங்கள் செய்து திருமணத்தைச் சிறப்பாக முடித்து வைக்கப் பாரிவேந்தன் மக்கள் நல் வாழ்வு பெற்றனர்.

புகழ்ந் துரை.

பகைவர்க்கு அச்சமும், பண்புவாய்ந்த குடிகட்கு இன்பமும், ஒருங்கே நல்கிய பாரிவேளைப் பற்றி சைவசமயாச்சாரியர்களுள் ஒருவரும் பரவை நாச்சியாருக்காகப் பார்வதி பாகனைத் தூதாக விடுத்தவருமாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமிழ்வேதமாகிய தேவாரத்தில்,

"கொடுக்கிலாதானைப் பாரியே என்று
கூறினும் கொடுப்பா ரிலை"

என்றும், அருணையம்பதியின் வரப்பிரசாதியாராகிய ஸ்ரீ அருணகிரி நாதர் யாவரும் விரும்ப முறும் திருப்புகழில் "வண்புகழ் பாரி" என்றும், மண்டலபுருடனார் தாமியற்றிய சூடாமணி நிகண்டில் 'பாரி' என்றும் காலஞ்சென்ற கவிச் சக்ரவர்த்தியாராகிய சி. சுப்பிரமணிய பாரதியார் எட்டயாபுரம் மன்னரைப் பாடிய பாடலில் "பாரி வாழ்ந்திருந்த சீர்த்திப் பழந் தமிழ்நாட்டின் கண்ணே" என்றும் மற்றைப் புலவர்களும் அறிஞர்களும் பாரியைப்பற்றிப் புகழ்ந்துரையாகக் கூறி யிருப்பதும்,

"பாரி பாரி என்று பலர் ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப்புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே" —(புறம்)

என புலவர் பெருமான் கபிலமுனிவர் பாரியின் பெருமையைப் பற்றி நிந்தாஸ் துதியாகக் கூறியிருப்பதும், பாரி வள்ளலின் பெருங்கருணைக்குத் தக்க சான்றாகின்றது.

முடிவுரை.

அன்பர்களே! இரப்போர்க்கு மட்டுமன்றி இயற்கைப் பொருட்கும் ஈந்து என்றும் வாடாத செஞ்சொற் பாமாலை பெற்ற பறம்புமலைச் சோதியாகிய பாரி வள்ளலை எவ்வாறு புகழ்வது? பாரி வேந்தன் ஒப்பாரும் மிக்காரு மில்லாதவன். ஊழி திறம்பினும் உரை திறம்பாதவன். இவனது கீர்த்தியும், வீர தீரச் செய்கையும், சாந்தமும், பொறுமையும், தயையும், கருணையும், சதுர்வித உபாயமும், பறம்புநாட்டைத் தாண்டி பாரத நாட்டிற்கு அப்பாலும் பரவி நின்றது, நிற்கின்ற தென்றால் அவனது புகழைப் புகலுந் தரமுடையவர் யாவர்? இன்றும் இவனது மாண்பைப் புகழாதா ரில்லை. இவனது நறுங் குணங்களையும், வீரச் செயல் களையும், சிந்தியாதா ரில்லை. இவனது எதிரிகளாகிய சேர, சோழ பாண்டியாதி தமிழ்ப் பெரு மூவேந்த ரும் இவனது அருங் குணத்தைப் போற்றினர்கள். தேசத்துக்காகவே இவனது உடல், பொருள், ஆவி மூன் றையும் இவன் அர்ப்பணஞ் செய்தான். இவன் இவ்வளவு பெரியவ னென்பது இவனது காலத்திலேயே விளங்கிய தல்லாமல், பூலோகம் உள்ளளவும், மகமேருகிரி உள்ளள வும், இமயகிரி (பனிமலை) உள்ளளவும், சூரிய சந்திரர் உள் ளளவும், அலை கடல்கள் உள்ளளவும் பறம்புமலை உள்ளள வும் இவன் புகழ் ஜொலித்துக்கொண்டேயிருக்கும். பறம்பு நாட்டிலுள்ள பறம்புமலைக் (பிரான்மலை) கிழவனாகிய பாரி வேந்தனானவன் புவியரசாகவும், கவியரசாகவும், கொடை யரசாகவும், அகிம்சா வீரனாகவும், தர்ம வீரனாகவும், சுத்த வீரனாகவும், சுதந்தர வீரனாகவும், வீராதி வீரனாகவும், தேச வீரனாகவு மிருந்து வந்தது போற்றற் குரியதாகும். இவனது இளம் பிராயத்திலிருந்து செய்து வந்த சேவையின் பயனைக் கண்டு பாரத மாதாவும் பைந்தமி ழணங்கும் ஆனந்தமடை ந்தார்கள். லோகமாதா மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தாள். இவனது இளம் பிராயத்தில், வீர வாலிபதசையில் இப் பெரி யோனது பிரிவாற்றாமைக்காக ஏங்கி நிற்கும் தமிழணங்கின்

கண்ணீரைத் துடையுங்கள். பாரத மாதாவின் பரிதவிப்பை அகற்றுங்கள். லோகமாதாவுக்கு ஆதரவு கூறுங்கள்.

அந்தோ! இவனது பிரிவால் பறம்பு நாடு ஒப்பற்ற தியாக மூர்த்தியை இழந்தது! பாரத நாடு விலைமதிப்பிடற்கரிய மாமணியை இழந்தது! பூமண்டலம் ஓர் புண்ணியப் பொற்குன்றை இழந்தது! பறம்பு நாட்டு மக்கள் அரும் பெருந் தலைவனை இழந்தார்கள்! தமிழ்ப் பெரும் புலவர்கள் தரும வீரனை இழந்தார்கள்! பறம்பு நாடு பெரிய மாணிக்கத்தை இழந்தது! தமிழணங்கு உயர்ந்த ஆபரணத்தை இழந்தாள்! பாரத தேவி நிகரற்ற வீரனை இழந்தாள்! பாரத வீரர் உலகு ஒப்புயர் வற்ற வாலிப வீரனை இழந்தது! வீரசுவர்க்க உலகு நிகரற்ற ஜோதியைப் பெற்று விட்டது! சகோதரர்களே! சகோதரிகளே! இவனது ஆத்ம சக்தி முன்னைக் காட்டிலும் அதிக பலத்துடன் மின்சார வேகத்தோடு ஊடுருவி நாட்டில் புதிய புதிய சத்தியைக் கிளப்பிக்கொண்டே இருக்குமாறு நாம் சாந்த தேவியைத் தொழுவோமாக! தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் வள்ளல் பாரியைப்போலாவீர்களாக! பாரிவாழ்க! பாரீசன் வாழ்க! ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குறிப்பு:—"பாரியின் விரிவான சரித்திரம் "வள்ளல்பாரி" என்ற பெயரோடு மதுரை யாதவமித்திரன் பத்திரிகையில் வெளி வருவதால் அன்பர்கள் அதில் பார்ப்பார்களாக.

நவீனகதா அச்சுக்கூடம், இரங்கூன்.